**செய்தி வெளியீடு எண் : 1478** **நாள் : 25.07.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளை நேர்காணல் செய்து பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் – மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் அறிவிக்கப்படும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், தமிழ்நாட்டின் கடைக் கோடியில் வாழும் மக்களும் அறிந்து பயன்பெற அவற்றை பொதுமக்களிடம் விரைவாக எடுத்துச் செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கில், செய்தி மக்கள் தொடர்புத் துறையில், தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களை 6 மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் இணை இயக்குநர் அளவிலான அலுவலர்களை நியமித்து அவர்களுடன் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி திட்டங்களை விரைந்து செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னையில் 22.07.2023 அன்று சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று (25.07.2023) சென்னை மாநில செய்தி நிலைய கூட்டரங்கில் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மதுரை மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மதுரை மண்டலங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோரால் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகளின் முன்னேற்ற நிலை, தமிழரசு சந்தாக்களின் முன்னேற்ற நிலை, நினைவகங்கள் ஆய்வு அவற்றின் பராமரிப்பு, தமிழ்நாடு நாள் விழா கொண்டாட்டம் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தனது தலைமையுரையில் கூறியதாவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகளில் சிலை மற்றும் அரங்கம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யும் வகைகளில் காலம் தாழ்த்தாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இடங்களை விரைவாக தேர்வு செய்து மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுகளை விரைந்து தலைமையிடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய ஏற்பாடுகளை செவ்வனே செய்ய வேண்டும் எனவும், தற்பொழுது நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் முடிந்த பணிகளை தலைமையிடத்திற்கு தெரிவித்தால் அவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்க வாய்ப்பாக அமையும் எனவும் அறிவுறுத்தினார்

அதனைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ஜீலை 18 ஆம் நாளை தமிழ்நாடு நாள் விழாவாக மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டதற்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும், அடுத்த வருடத்தில் இவ்விழாவினை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தினார், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, எதிர்வரும் சுதந்திர தினத்தையொட்டி மாவட்டங்களிலுள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சிலைகளை தூய்மைப்படுத்தி ஆகஸ்டு 15 ஆம் நாளன்று மலர் மாலை அணிவித்தும், அரங்கங்கள், நினைவகங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் மணிமண்டபங்களை தூய்மைப்படுத்தி ஆகஸ்டு 14, 15 மற்றும் 16 ஆகிய மூன்று நாட்களுக்கு அவற்றை வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும் என்றும், இதனைப் பொதுமக்கள் கண்டு எந்த நோக்கத்திற்காக இவ்வாறு செய்யப்படுகிறது என்பதை அறிந்து காரணத்தை தெரிந்து கொள்ளும் அளவிற்கு நமது செயல் இருக்க வேண்டுமெனவும், நமது சுதந்திரத்திற்காக உழைத்த தியாகிகளுக்கு நாம் செய்யும் பாக்கியமாக இதைக் கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

பின்னர், மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள திறந்த வெளி விளம்பரங்களில் அரசின் முக்கிய திட்டங்களின் தலைப்பு மட்டுமே உள்ளது. அந்த தலைப்புடன் அத்திட்டங்களின் மூலம் பயன் பெறுவதற்கான தகுதிகளையும் குறிப்பிட வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் அத்திட்டங்கள் குறித்து அறிந்து பயன்பெற ஏதுவாக இருக்கும் எனவும். இதுகுறித்து, தலைமையிடத்தில் ஆலோசனைப் பெற்று விளம்பர பலகைகளை வைக்குமாறும், பொதுமக்கள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றோர்களிடம் தெரிவிக்கும் கோரிக்கைகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கண்டறிந்து மண்டல இணை இயக்குநர்கள் மூலம் தலைமையிடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும், இதன் மூலம் அடுத்த வருடத்தில் அவர்களது கோரிக்கைகளை

அறிவிப்பாக அறிவித்து நிறைவேற்ற ஏதுவாக இருக்கும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்களது அரசு நிகழ்ச்சிகளை முடித்து திரும்பும்பொழுது, அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற விவசாயிகள், மாணவர்கள் போன்ற பயனாளிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்களை செய்தியாளர்களோடு சந்திக்கச் செய்து நேர்காணல் மேற்கொண்டு பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அதற்கான நடவடிக்கைகளை செவ்வனே மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்,

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), திருமதி. கி.சாந்தி, கூடுதல் இயக்குநர் (செய்தி) (மு.கூ.பொ), திரு. கு. தமிழ்செல்வராஜன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், பொதுப்பணித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in